தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை, (Pension Pay Office பின்புறம்),
நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன்,இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10979/விசாரணை/E/2024**

மரு.P.காளியப்பன் -- மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
சென்னை மருத்துவக் கல்லூரி,
சென்னை-3. .. பொது அதிகார அமைப்பு

******

**இறுதி ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தால் 30.03.2026 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில், சென்னை மருத்துவக் கல்லூரி நிர்வாக அலுவலர்/பொதுத் தகவல் அலுவலர் திரு.ஜா.அமல்ராஜ் 22.05.2026 அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவுப்படி, மேல்முறையீட்டாளருக்கு 20.05.2026 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக தகவல்கள் 21.05.2026 அன்று பதிவஞ்சலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மேல்முறையீட்டாளருக்கு பதிவஞ்சலில் அனுப்பியதற்கான அஞ்சலக ரசீதின் நகல் ஆகியவற்றை ஆணையத்தின் முன் தாக்கல் செய்தார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவலினை பரிசீலனை செய்கையில், இனம் 8-ல் மேல்முறையீட்டாளர் கோரிய பணிப்பதிவேட்டின் 226 பக்கங்கள் கொண்ட நகலை உரிய தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளுமாறு தெரிவித்ததை இவ்வாணையத்தால் ஏற்க இயலவில்லை. மேல்முறையீட்டாளருக்கு குறித்துரைக்கப்பட்ட காலக்கெடுவிற்குள் தகவல் வழங்காத காரணத்தால், அவரது பணிப்பதிவேட்டின் நகல் சட்டப்பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட வேண்டும் என்று இவ்வாணையம் கருகிறது. மேலும், பொதுத் தகவல் அலுவலரால் இதர இனங்களுக்கு உரிய தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக இவ்வாணையம் தீர்மானிக்கிறது.

3. ஆகவே இவ்வாணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அவரது 226 பக்கங்கள் கொண்ட பணிப்பதிவேட்டின் நகலை சட்டப்பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து, அவர் அதனை பெற்று ஏற்பளிப்பு செய்த அறிக்கையை 30.06.2026-க்குள் தவறாமல் பதிவஞ்சலில் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைத்திட பொதுத் தகவல் அலுவலருக்கு

உத்தரவிட்டு, இவ்வழக்கினை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஆணை நாள்: 01.06.2026** **ஒம்/-.பி.தாமரைக் கண்ணன்,**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10979/விசாரணை/E/2024**

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்/நிர்வாக அலுவலர்,
சென்னை மருத்துவக் கல்லூரி,
சென்னை-3.

மரு.P.காளியப்பன்
69A, 24வது குறுக்குத் தெரு,
4வது மெயின் ரோடு, நொளம்பூர் பகுதி-1,
முகப்பேர் மேற்கு, சென்னை-37.

Copy to: File

RJ/PS 1.6